# ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா
## ஏனாத்தூர்
## தமிழ்த்துறை
## கோடையில் சித்திரைத் திருவிழா

இந்தியாவில் தமிழ்நாட்டில் தமிழ் வருடப்பிறப்பான சித்திரை மாதத்தில் பௌர்ணமிக்கு முன்னதாக பத்து நாட்கள் கொண்டாடப்படும் திருவிழாவாகும்.

தமிழ்த்துறை நடத்திய “கோடையில் சித்திரைத் திருவிழா“ நிகழ்வானது 26.04.2023 முதல் 28.04.2023 வரை முனைவர் க.கவிதா தமிழ்த்துறைத் தலைவர் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவின் முக்கிய நோக்கம் பாரம்பரியத்தை போற்றும் விதமாகவும் மாணவர்களின் மன அழுத்தத்தை போக்கும் நோக்கிலும் கொண்டாடப்பட்டது.

கோடைக் காலத்திற்கு ஏற்ற உணவு வகைகள் அவற்றின் முக்கியத்துவம் மற்றும் நீர்ம உணவு வகைகளைப் பருகுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் இவற்றை அன்றாட வாழ்வில் தினசரி உணவோடு எடுத்துக்கொண்டால் உடலும் மனமும் புத்துணர்ச்சி பெறுதல் குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் தங்களின் தனித்திறன் மூலம் வெளிப்படுத்தினர்.

இன்றைய காலத்தில் மாணவர்கள் அனைவரும் விளையாடுவதை மறந்து கம்ப்யூட்டர் கேம்ஸ் மொபைலில் கேம் விளையாடுவதையே விரும்புகின்றனர்.. இதனால் அவர்களுக்கு உடலில் பல பாதிப்புகள் ஏற்படுகின்றது. விளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித நோயும் அணுகாமல் உடல் ஆரோக்கியத்துடன் வைத்துக்கொள்ள முடியும் என்பதை உணர்த்தும் விதமாக மாணவர்களுக்கு பல்திறன் சார்ந்த போட்டிகள் நடத்தப்பெற்றன. அப்போட்டிகளின் விவரம் வருமாறு

1. தூயத்தமிழில் ஒரு நிமிடம் பேசுதல்
2. கோலப்போட்டிகள்
3. சுமையல் போட்டிகள்
   (1) ஆரோக்கிய சமையல்
   (2) நீர்ம உணவுகள் (பழரசம்)
4. வெஜிடபுள் கார்விங்
5. மூலிகையினைக் காட்சிப்படுத்தி மருத்துவ சிறப்பினை எடுத்துரைத்தல்
6. மெகந்தி
7. படத்தைப் பார்த்து பதில் கூறுதல் (Connection)

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மனதில் அதிக வலிமை பிறக்கும். விளையாட்டின் போது ஏற்படக்கூடிய வெற்றி மற்றும் தோல்வியினை சந்திக்கும் போது மனவலிமை அதிகரித்து வாழ்க்கையில் வரக்கூடிய பிரச்சனைகளை சமாளிக்கும் பக்குவம் அவர்களுக்குள்ளும் பிறக்கும். இதனால் அவர்களின் உடல் மட்டுமின்றி மன நலமும் சிறப்பாக இருக்கும் என்பதே இவ்வழாவின் வெற்றியாகும்.

இவ்வழாவில் தமிழ்த்துறை பேராசிரியர்கள் முனைவர்.ப.யோ.புவனேஸ்வரி மற்றும் செல்வி மகேஷ் இருவரும் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டனர் தமிழ்த்துறை மாணவர்கள் விழாவில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டனர். இவ்விழாவில் பிறத்துறைச் சார்ந்த மாணவர்கள் 150 பேர் கலந்து கொண்டனர்.


SRI CHANDRASEKHARENDRA SARASWATHI
VISWA MAHAVIDYALAYA


Enathur, Tamil Nadu, India
Sri Jayendra Saraswathi Street, VP6H+JW5, Enathur, Tamil Nadu 631561, India
Lat 12.861557°
Long 79.729992°
26/04/23 12:40 PM GMT +05:30


Enathur, Tamil Nadu, India
Sri Jayendra Saraswathi Street, VP6H+JW5, Enathur, Tamil Nadu 631561, India
Lat 12.86145°
Long 79.729827°
26/04/23 12:33 PM GMT +05:30


Enathur, Tamil Nadu, India
VP6H+JW5, Enathur, Tamil Nadu 631561, India
Lat 12.861589°
Long 79.730007°
27/04/23 10:41 AM GMT +05:30


Enathur, Tamil Nadu, India


Enathur, Tamil Nadu, India
Sri Jayendra Saraswathi Street, VP6H+JW5, Enathur, Tamil Nadu 631561, India
Lat 12.861535°
Long 79.730007°
28/04/23 02:14 PM GMT +05:30